# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 11.01.2023**

**அசல் வழக்கு எண்.87/2014**

**பி.வா.சா.2 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பிரதிவாதிகளின் உடன் பிறந்த சகோதரியான பத்திரகாளியின் கணவர் என்றால் சரிதான். வழக்கில் நீதிமன்ற ஆணையர் தபசில் சொத்தை பார்வையிடும் போது நானும் உடன் இருந்தேன். தபசில் சொத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையர் வந்திருந்தார். நீதிமன்ற ஆணையர் தோராயமாக தன்னுடைய அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் திருமலாபுரம் கிராம இந்துநாடார் சமூகத்தில் அங்கத்தினர் என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதியின் நிலம் எங்கு உள்ளது அதனுடைய நீள அகலம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் நிலம் மற்றும் அதன் நீள அகலம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் என்னுடைய உறவினர்கள் என்பதால் நான் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் கிராம புல வரைபடத்தில் எந்தெந்த இடத்தில் பாதை உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**